

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திண்டிவனத்தில் நடைபெற்ற திமுக செயற்குழு ஆலோசனைக் கூட்டத்தில் மண்டல பொறுப்பாளரும், வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சருமான எம். ஆர். கே. பன்னீர்செல்வம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ ,தொகுதி பார்வையாளர்கள்செஞ்சி கார்த்திகேயன், மயிலம் இள புகழேந்தி,திண்டிவனம் ஜாஃபர் அலி, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர் உள்ளனர்.

### துணைவேந்தர்களை நியமிக்கும் வழக்கில் உயர்நீதிமன்றம் மாநில அரசுக்கு எதிராக

### அவசர அவசரமாக வழக்கினை நடத்தி, தடையாணை வழங்கலாமா?

# தமிழ்நாடு அரசுக்கு சங்கடத்தை ஏற்படுத்த வழங்கப்பட்ட தீர்ப்பு கண்டனத்திற்குரியது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பேட்டி

சென்னை, மே 23 -

துணைவேந்தர்களை நியமனம் செய்யும் அதிகாரம் தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்ற அமர்வு அவசர அவசரமாக தமிழ்நாடு அரசுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தும் நோக்கத்தோடு தடையாணை வழங்கியிருப்பது கண்டனத்திற்குரியது என்று செய்தியாளர்களுக்குத் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் பேட்டியளித்துள்ளார்.

துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை அரசுக்கு வழங்கும் சட்டத்திற்கு உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் (21.5.2025) இடைக்காலத் தடை விதித்துள்ளது. மைக்கை மியூட் செய்துவிட்டு, தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது கண்டனத்திற்குரியது - சட்ட விரோதமானது என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி நேற்று (22.5.2025) செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் கூறினார்.

அவ்விவரம் வருமாறு:

செய்தியாளர்கள்: நேற்று முன்தினம் (21.5.2025) சென்னை உயர்நீதிமன்றத்தில், துணை வேந்தர்கள் நியமன சட்டத்திற்குத் தடையாணையை ஓர் அமர்வு வழங்கியுள்ளதே, அதுபற்றி உங்கள் கருத்து?

கி.வீரமணி: ஏற்கெனவே நான் அறிக்கையில் எழுதியிருக்கின்றேன் (16.5.2025); இது திட்டமிட்ட ஏற்பாடு. அரசமைப்புச் சட்டத்திற்கும், நடைமுறைக்கும் விரோதமாக இரண்டு பேர் அமர்வு திட்டமிட்டு, உச்சநீதிமன்றத்தைவிட, உயர்நீதிமன்றம் உயர்ந்ததைப் போல, தவறான, சட்ட விரோதமான ஒரு தடையாணை கொடுக்கப்பட்டு இருக்கிறது.

அவசர அவசரமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய வழக்கல்ல!

இந்த வழக்கு அவசரமாக எடுத்துக்கொண்டு, விசாரிக்கப்பட வேண்டிய வழக்கும் அல்ல. அந்த வழக்கை, குறிப்பிட்ட இரண்டு நீதிபதிகள் கொண்ட (ஜி.ஆர்.சுவாமிநாதன், லட்சுமி நாராயணன்) விடுமுறைக் கால அமர்வுதான் விசாரித்து, கடைசி நாளில், அதற்குத் தடை வழங்கவேண்டும் என்கிற ஏற்பாட்டை செய்திருக்கிறார்கள்.

விசாரணையின்போது மாலை 6 மணிக்குமேல், ஒலிபெருக்கியை நிறுத்திவிட்டு, நாங்கள் எப்படி வேண்டுமானாலும் செய்வோம் என்பதுபோல் அவர்கள் சட்டத்தைக் கையில் எடுத்திருக்கிறார்கள்.



முழுமையாக அந்த நீதிபதியின் போக்கு என்பது கெட்ட எண்ணத்தோடு, Malafide Action என்று நாங்கள் குற்றம் சுமத்துகிறோம்.

அதற்குரிய நடவடிக்கைகள் உரிய நேரத்தில் செய்யப்படும். உச்சநீதிமன்றத்திலும் தமிழ்நாடு அரசு சார்பில் மேல்முறையீடு செய்யப்படும் என்று நம்புகிறோம்.

உச்சநீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இருக்கும் நிலையில், உயர்நீதிமன்றம் தலையிடலாமா?

ஓர் அரசாங்கத்திற்கு, ஒரு வாரத்திற்குள்ளாக பதில் சொல்லவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மிக முக்கியமான பிரச்சினையில், உச்சநீதிமன்றம் தீர்ப்பு கொடுத்த ஒரு வழக்கில், அது சம்பந்தமான வழக்குகள் நிலுவையில் இருக்கின்ற நிலையில், அதை வழக்குரைஞர்கள் சுட்டிக் காட்டியபோதும், அதைப் பற்றி கவலைப்படாமல், நாங்கள் எங்கள் இஷ்டத்திற்கு "தானடித்த மூப்பாக நடப்போம்" என்பது போல சட்டத்தை வளைத்திருக்கிறார்கள்.

இப்படி அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுப்பது எவ்வகையில் நியாயம்? அதுவும் விடுமுறை காலத்தில், தமது அமர்வின் காலக்கெடு முடிவதற்குள் இந்த இடைக்கால தடை ஆணை வழங்குவதின் உள் நோக்கம் என்ன?

**தமிழ்நாடு அரசுக்கு சங்கடத்தை ஏற்படுத்தும் நோக்கம்!**

எனவே, அவர்கள் சட்ட விரோதமாகக் கொடுத்திருக்கின்ற தடையாணை மீது உச்சநீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்ற காரணத்தினால், மேலே அதனுள் புக விரும்பவில்லை.

ஆனால், இது முழுக்க முழுக்க தமிழ்நாடு அரசுக்கு ஒரு சங்கடத்தை உருவாக்கவேண்டும் என்கிற ஒரு கெட்ட எண்ணத்தோடு, Malafide Intentionஎன்பதோடு இது நடத்தப்பட்டு இருப்பது வன்மையான கண்டனத்திற்குரியதாகும்!

- இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி செய்தியாளர்களிடம் கூறினார்

### ஏழை மாணவர்களுக்கான 25 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கான

# நிதியை தமிழ்நாட்டிற்கு ஒதுக்காதது ஏன்?

## விவரங்களைத் தாக்கல் செய்ய – ஒன்றிய அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, மே 23-

கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ்,தமிழ்நாட்டுக்கு ஒதுக்க வேண்டிய நிதி குறித்த விவரங்களை தாக்கல் செய்ய ஒன்றிய அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கட்டாய கல்வி உரிமை சட்டத்தின்படி தனியார் பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்கு 25 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. ஆனால் 2025ஆம் ஆண்டுக்கு இந்த இட ஒதுக்கீட்டின் கீழ் இன்னும் மாணவர் சேர்க்கை தொடங்கப்படவில்லை என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

கோவையைச் சேர்ந்த மறுமலர்ச்சி இயக்கம் என்ற அமைப்பின் நிர்வாகி வே.ஈஸ்வரன் இவ்வழக்கை தொடர்ந்தார்.

அவர் தனது மனுவில், "உடனடியாக மாணவர் சேர்க்கையை தொடங்க தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட வேண்டும்" என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஜி ஆர் சுவாமிநாதன் மற்றும் வி.லட்சுமி நாராயணன் அடங்கிய அமர்வில் நேற்று (மே 22) விசாரணைக்கு வந்தது.

அப்போது தமிழ்நாடு அரசு தரப்பில் கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன் ஆஜராகி, "கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தில் 25 % இட ஒதுக்கீட்டு மாணவர்களுக்கான கல்வி கட்டணத்தில் 60 சதவிகித தொகையை ஒன்றிய அரசும் 40 சதவிகித தொகையை மாநில அரசும் வழங்க வேண்டும். ஆனால் கடந்த 2021முதல் எந்த நிதியையும் ஒன்றிய அரசு ஒதுக்கவில்லை. 100 சதவிகித தொகையை மாநில அரசு தான் வழங்கி வருகிறது. ஒன்றிய அரசு நிதி ஒதுக்காவிட்டால் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து முடிவெடுக்க மே 28ஆம் தேதி தமிழ்நாடு அரசு ஒரு கூட்டத்தை நடத்தவுள்ளது" என்று வாதத்தை முன்வைத்தார்.

ஒன்றிய அரசு நிதி ஒதுக்காததை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதையும் கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன் சுட்டிக்காட்டினார்.

இதையடுத்து நீதிபதிகள், ஒன்றிய அரசு ஏன் நிதி ஒதுக்கவில்லை என்று கேள்வி எழுப்பினர்.

இதற்கு ஒன்றிய அரசு தரப்பு வழக்கறிஞர் பாபு, அனைத்து மாநிலங்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டு வருவதாகவும் சில காரணங்களால் தமிழ்நாட்டுக்கு நிதி வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

என்ன காரணத்துக்காக நிதி ஒதுக்கப்படவில்லை என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன், ஒன்றியத்தில் ஆளும் கட்சிக்கு தமிழகத்தில் ஒரு எம்பி கூட இல்லை என்பதால் ஒதுக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

இதையடுத்து, கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ், 25 சதவிகித இட ஒதுக்கீட்டு இடங்களுக்கு தமிழ்நாட்டுக்கு ஒதுக்க வேண்டிய நிதி விவரங்களை தாக்கல் செய்ய ஒன்றிய அரசுக்கு உத்தரவிட்டு வழக்கு விசாரணையை நீதிபதிகள் ஒத்தி வைத்தனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# திருவள்ளூர் மத்திய மாவட்டம் சார்பில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் தொடர் பொதுக் கூட்டங்கள்!



## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ஜூன் 3 ஆம் தேதி அன்று தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழகங்களின் சார்பில் கீழ்கண்ட இடங்களில் சிறப்பு பட்டிமன்றம் மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது

| நாள் | நேரம் | நிர்வாகங்கள் | செயலாளர்கள் | கழக பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 11.06.2025 | மாலை 5 மணி | திருவேற்காடு நகரம் | NEK மூர்த்தி | மதிமாறன் டெக்சின் ரோமேரியோ |
| | மாலை 7 மணி | எல்லாபுரம் மத்திய ஒன்றியம் | தங்கம் முரளி | திருவெற்றியூர் கருணாநிதி யாசர் அராபத் |
| 12.06.2025 | மாலை 5 மணி | திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் | சே.பிரேம் ஆனந்த் | தாயகம் கவி முல்லை வேந்தன் |
| | மாலை 7 மணி | ஆவடி கிழக்கு பகுதி | வி.பேபி சேகர் | தூத்துக்குடி சரத்பாலா விருகை சந்தோஷ் ஜெய் |
| 13.06.2025 | மாலை 5 மணி | திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் | ஆர்.ஜெயசீலன் | செங்குன்றம் திராவிட மணி செல்வி. கீர்த்தனா |
| | மாலை 7 மணி | ஆவடி மேற்கு பகுதி | பொன் விஜியன் | தமிழன் பிரசன்னா திரு. மா. பூபதி |
| 14.06.2025 | மாலை 5 மணி | பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் | டி.தேசிங்கு | கரூர் முரளி கவின்குமார் |
| | மாலை 7 மணி | ஆவடி தெற்கு பகுதி | ஜி.ராஜேந்திரன் | சைதை சாதிக் மோகநிதி |
| 15.06.2025 | மாலை 5 மணி | ஆவடி வடக்கு பகுதி | ஜி.நாராயண பிரசாத் | ஈரோடு இறைவன் பேரரசன் |
| | மாலை 7 மணி | திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் | புஜ்ஜி ராமகிருஷ்ணன் | பவானி கண்ணன் சிலம்பரசன் |
| 16.06.2025 | மாலை 5 மணி | திருமழிசை பேரூர் | தி.வே.முனுசாமி | செல்வி. சேலம் சுஜாதா மாறன் |
| | மாலை 7 மணி | திருநின்றவூர் நகரம் | தி.வை ரவி | ஆடுதுறை உத்திராபதி நா. அருண் |
| 17.06.2025 | மாலை 5 மணி | பூவிருந்தவல்லி நகரம் | G.R.திருமலை | திண்டுக்கல் ஐ. லியோனி, ரிஷி சந்தோஷ் |
| 19.06.2025 | மாலை 5 மணி | பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் | ப.ச.கமலேஷ் | செல்வி. மதிவதனி சாய் ரித்திக் சக்திவேல் |

எனவே மேற்கொண்ட பொதுகூட்டத்தில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினரும் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி , தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில நிர்வாகிகள் பிரபு கஜேந்திரன், சி.ஜெரால்டு, மாவட்ட கழக நிர்வாகிகள் மா.இராஜி, வி.ஜெ.சீனிவாசன், காயத்ரி ஸ்ரீதர், எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், எம். முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ. மகாதேவன், காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர், மற்றும் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக களின் நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் கிளை கழக வட்ட கழக செயலாளர் நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக நடைபெறும் பொது கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,**

செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

### செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டியில்

# 'நான் முதல்வன்' கல்லூரிக் கனவு - 2025 வழிகாட்டுதல் நிகழ்ச்சி!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி மே 23-

விழுப்புரம் மாவட்டம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் சார்பில் நான் முதல்வன் கல்லூரி கனவு 2025 வழிகாட்டுதல் நிகழ்ச்சி செஞ்சி ஒன்றியம் ஆலம் பூண்டி ரங்க பூபதி பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொத்தியார் அலிமஸ்தான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திண்டிவனம் மாவட்ட கல்வி அலுவலர் சிவசுப்பிரமணியன் அனைவரையும் வரவேற்றார். நான் முதல்வன் திட்டம் மற்றும் திறன் பயிற்சி மாவட்ட உதவி இயக்குனர் சிவ நடராஜன் கலந்து கொண்டு திட்ட விளக்க உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கி சிறப்புரை ஆற்றி உயர்கல்வி படிக்கும் மாணவ மாணவிகளுக்கு நான் முதல்வன் திட்டம் குறித்த புத்தகத்தை வழங்கினார்.

ரங்க பூபதி கல்லூரி குழுமத்தலைவர் வழக்கறிஞர் ரங்க பூபதி, செயலர் ஸ்ரீ பதி, விழுப்புரம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் நாகலட்சுமி, சென்னை ஐ.ஐ.டி திட்டத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் அரிகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு உயர்கல்வின் முக்கியத்துவம் குறித்து விளக்க உரை நிகழ்த்தினர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற தொலை நோக்குசிந்தனையுடன் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் கல்வியில் பெண்கள் உயர வேண்டும் என்ற வகையில் நான் முதல்வன் திட்டத்தை தொடங்கி வைத்து படிக்கின்ற மாணவ மாணவிகள் அனைவரும் அனைத்து நிலையிலும் முதன்மை பெற வேண்டும் என்ற வகையில்கல்லூரி கனவு 2025 வழிகாட்டுதல் நிகழ்ச்சியை நடத்துவதற்கு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள தமிழ் சமுதாயத்தை கல்வியின் மூலம் உயர்த்த வேண்டும் என்பதற்காக நீட் தேர்வு மூலம் உள்ள பல்வேறு இடர்பாடுகள்இருந்தாலும் அதைதூக்கி எறிந்துவிட்டு நான் இருக்கிறேன் என்று கூறி இன்றைக்கு கல்லூரி கனவு திட்டத்தை கொண்டு வந்து செயல்படுத்திவரும் முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம். புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்ன் திட்டம், முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டம் போன்ற கல்வித்துறைக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்துகல்வியில் இடையில் நின்ற மாணவர்களை கூட தொடர்ந்து கல்வி பெற செய்துகல்விக்கு தமிழ்நாடுமுதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் முக்கியத்துவம் கொடுப்பதால் தான் இந்தியாவில் சராசரி கல்வி விகிதத்தில் தமிழ்நாடு 50 விழுக்காடு பெற்றுள்ளது என்றும் மற்ற மாநிலங்களில் 24,28விழுக்காடு பெற்றுள்ளதாகவும்,தற்போது மேல்நிலைக் கல்வி முடித்துள்ள மாணவ மாணவிகள் நான் முதல்வன் கல்லூரி கனவு வழிகாட்டுதல் நிகழ்ச்சி மூலம் மாணவர்களாகிய நீங்கள் எதிர்காலத்திற்கு தேவையான கல்வியை தேர்ந்தெடுத்து படித்துகல்வியிலும் பொருளாதாரத்திலும்உயர்ந்த இடத்திற்கு வர வேண்டுமென முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கேட்டுக் கொண்டார். தொடர்ந்து மாவட்ட வேலைவாய்ப்பு பயிற்சி அலுவலகம், செஞ்சி, திண்டிவனம் அரசு கலைக்கல்லூரி மற்றும் அரசு தொழில்நுட்ப கல்லூரி உள்ளிட்ட தனியார் கல்லூரிகள் சார்பில் அமைக்கப்பட்டிருந்தஉயர் கல்வி படிக்கும் வழிகாட்டுதல் அரங்குகளை முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ நேரில் சென்று பார்வையிட்டார்.

செஞ்சி, மேல்மலையனூர், வல்லம் ஒன்றியத்தைச் சேர்ந்த 27 மேல்நிலைப்பள்ளியிலிருந்து சுமார் 900மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக எழுத்தர் தமிழழகன், திண்டிவனம் கல்வி மாவட்ட ஆய்வாளர் விநாயகமூர்த்தி, மேல்மலையனூர் வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன்,வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள், தலைமை ஆசிரியர்கள், ரங்க பூபதிகல்லூரி முதல்வர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவ மாணவிகள் பெற்றோர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நான் முதல்வன் திட்டம் மற்றும் திறன் பயிற்சி உதவி திட்ட அலுவலர் ஜெயச்சந்திரன் நன்றி கூறினார்.